ORIGINAL ARTICLE

# இஸ்லாத்தில் பெண்களின் பொருளாதார உரிமைகள்: ஒரு இலக்கிய மீளாய்வு

# [ISLĀTTIL PEṆKAḶIṈ PORUḶĀTĀRA URIMAIKAḶ: ORU ILAKKIYA MĪḶĀYVU]

# ECONOMIC RIGHTS OF WOMEN IN ISLAM: A REVIEW OF LITERATURE

**எம்.எம்.ஏ. அப்துல்லாஹ் / M.M.A. Abdullah [1]**
**எம்.ஐ.எம். ஜெஸீல் / M.I.M. Jazeel *[2]**

[1] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
Email: abdullahmma416@gmail.com
[2] Senior Lecturer, Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
Email: jazeelmi@seu.ac.lk

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/159

## Abstract

The discourse on economic rights of the woman is one of issues spoken today. Islam as code of the life expands in its all aspects, addresses genuine concern about economic rights of the woman. This paper aimed at examining the Islamic perspective on the women economic rights based on review of prevailing literatures and textual sources of Islam. Building a natural and balanced human society is primary mission of Islam through its divine guidance. Islam recognizes the natural abilities of both male and female and assigns their roles in a society. In Islamic social system both genders have their own and unique roles in human development in the meantime both have their rights. The Islamic perspective on economic rights of the woman is derived its basics from the interpretation of the Islamic textual sources primarily al-Qur'an and historical experience of model Islamic society in early Islamic period. The concepts of inheritance, mahr etc. in practice ensure the distribution of wealth to female proportion of the Muslim community and enable them to maintain and involve in the growth.

**Keywords:** Economic Rights, Women Empowerment, Women's Rights, Islam, Islamic Jurisprudence.

## ஆய்வுச் சாரம்

பெண்களின் பொருளாதார உரிமைகள் நவீன உலகின் பிரதான பேசுபொருள்களில் ஒன்றாகும். வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்களை வழங்கும் இஸ்லாத்தில்

பெண்களின் பொருளாதார உரிமைகள் தொடர்பான கரிசனையும் வலுவானதாகும். அந்தவகையில் இவ்வாய்வு பெண்களின் பொருளாதார உரிமைகள் தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோக்கினைப் பரிசீலிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வாய்வு இலக்கியங்களின் மீளாய்வை அடிப்படையாகக் கொண்டது. நேர்த்தியான சமூகக் கட்டமைப்பை தோற்றுவிக்க முனையும் இஸ்லாம் ஆண், பெண் ஆகியோரின் இயல்புகளைக் கவனத்தில் கொண்டு அவர்களின் பணிகளை துல்லியமாக வரையறுத்துள்ளது. மேலும் இஸ்லாம் இரு பாலினத்தவருக்கான பிரத்தியேகக் கடமைகளையும் பொறுப்புக்களையும் குறிப்பிட்டுள்ளதோடு அவ்விரு சாராருக்கும் அவர்களுக்கான உரிமைகளை சட்ட ரீதியான வரையறைகள் மற்றும் போதனைகள் ஊடாகவும் உத்தரவாதப்படுத்தியுள்ளது. இவற்றுள் பெண்களின் சமூக நிலையை மேம்படுத்துவதற்காக இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகள் மிக முக்கியமானவையாகும். வாரிசுரிமை, மஹர் போன்ற சொத்துப் பங்கீட்டு முறைமைகள் பெண்களுக்கான சொத்து உரித்தாக்கம், உரிமை மட்டுமல்லாது அவற்றை பராமரித்து விருத்தி செய்யும் வகிநிலை பாட்டபட்டதாகவே அமைந்துள்ளது எனக் கொள்ளமுடியும்.

**கருச்சொற்கள்:** பொருளாதார உரிமைகள், மகளிர் வலுவூட்டல், பெண்களின் உரிமைகள், இஸ்லாம், இஸ்லாமிய சட்டத்துறை.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 30th June 2021, revised 9th August 2021, accepted 16th August 2021

**ஆய்வுப் பின்னணி**

மனித வரலாறு நெடுகிலும் ஆண், பெண் ஆகியோரின் அரசியல், சமூக மற்றும் கல்வி போன்ற பல்துறைசார் உரிமைகள் தொடர்ந்தும் பேசுபொருளாகவே இருந்து வந்துள்ளது (Akhmatova, 2015)[1]. பெண்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் நோக்கில் நவீன உலகில் பல நாடுகளும் பல்வேறு சட்டமியற்றல்களை மேற்கொண்ட போதிலும் எழுத்துக்களில் மேற்கொள்ளப்படும் இம்மாற்றங்கள் நடைமுறையில் உள்ளனவா என்பது கேள்விக்குரியான விடயமாகும் (Kola, 2018)[2].

பெண்களின் பல்துறைசார் உரிமைகளுள் பொருளாதார உரிமைகள் மிகவும் முக்கியமானவையாகும் (Nishtar et al., 2017)[3]. 1948 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான சர்வதேசப் பிரகடனம் (Universal Declaration of Human Rights) மற்றும் 1979 ஆம் ஆண்டு பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளும் நீக்கப்பட வேண்டும் என அச்சபையால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மாநாடு (Convention on the Elimination of all Forms of Discrimination against Women) போன்ற பல்வேறு நடவடிக்கைகள் சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்ட போதும் பொருளாதார ரீதியாக பெண்கள் சமமான ஊதியம் பெறும் உரிமை, சொத்துரிமை போன்ற பல்வேறு பொருளாதாரம் சார் உரிமைகளை அனுபவிப்பதில் பல பாகுபாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் (Naja et al., 2018)[4].

மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்களை உள்ளடக்கிய இஸ்லாமிய ஷரீஆவில் பெண்களின் பொருளாதார உரிமைகள் தொடர்பான அதன் கரிசனையும்

மிகவும் வலுவானதாகும் (Abdullah, 2021)[5]. இஸ்லாத்துக்கு முற்பட்ட அரேபியாவில் பெண்கள் பல்வேறு கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டதோடு அவர்களுக்கான பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டபோதும் இஸ்லாத்தின் வருகையின் பின்னர் பொருளாதார ரீதியாக உடன்படிக்கைகளை மேற்கொள்ளல், தொழிலில் ஈடுபடல், சுதந்திரமான சொத்துடமை போன்ற பல்வேறு உரிமைகள் அவர்களுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டன (Ali et al, 2011; Lone et al., 2015)[6,7].

எனினும் இன்று பல நாடுகளில் முஸ்லிம் சமூகத்தில் பெண்களின் உரிமைகள் தொடர்பில் இஸ்லாமிய அடிப்படைகளுக்கு முரணான நடைமுறைகளும் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளும் நிலவுவதாக பல்வேறு ஆய்வு முடிவுகள் (Hoque et al., 2013[8]; Galloway, 2014[9]; Alfitri, 2014[10]; Abdullah et al., 2014[11]; Khan et al., 2016[12]; Naja et al., 2018[4]; Patoari, 2019[13]; Nisfa, 2019[14]) உறுதிப்படுத்தியுள்ளமையானது பெண்களின் உரிமைகள் தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்கள் தொடர்பில் எதிர்மறையான புரிதல்களை ஏற்படுத்தவல்லது என்ற வகையில் இவ்வாக்கம் பெண்களின் உரிமைகள் தொடர்பான இஸ்லாமிய நோக்கை கோட்பாட்டு ரீதியாக விளக்க முனைகிறது.

## ஆய்வு முறையியல்

பெண்களின் பொருளாதார உரிமைகள் தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோட்டத்தைப் பரிசீலித்தல் எனும் இவ்வாய்வின் நோக்கம் முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை அடிப்படையாகக் கொண்டு அடையப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்காக பெண்களின் பொருளாதார உரிமைகளுடன் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் என்பவற்றுடன் இஸ்லாமிய மூல ஆவணங்களான அல்குர்ஆன், அல்ஹதீஸ் மற்றும் செந்நெறிகால இஸ்லாமிய இலக்கியங்கள், தற்கால முஸ்லிம் அறிஞர்களின் ஆக்கங்கள் போன்றவற்றில் காணப்படும் பெண்களின் பொருளாதார உரிமைகளுடன் தொடர்பான மகளிர் வலுவூட்டல், பெண்ணின் வகிபாகம், சொத்து மற்றும் ஏனைய பொருளாதார உரிமைகள், தொழில் முனைவு ஆகிய எண்ணக்கருக்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## கண்டறிதல்களும் கலந்துரையாடலும்

### மகளிர் வலுவூட்டல்

இன்றைய உலகில் மகளிர் வலுவூட்டல் (women empowerment) விவகாரம் ஆய்வாளர்கள் இடையே கரிசனை பெற்றுள்ள ஒரு அம்சமாக மாறியுள்ளது. சுல்தானா போன்றோர் (2015)[15] குறிப்பிடுவதற்கிணங்க தனிமனித மற்றும் சமூகங்களின் இயலுமைகளைக் கவனத்தில் கொண்டு அவர்களின் ஆன்மீக, அரசியல் சமூக அல்லது பொருளாதார வலிமையை விருத்தி செய்வதையே வலுவூட்டல் எனும் பதம் குறிக்கிறது. அந்தவகையில் மகளிர் வலுவூட்டல் எனப்படுவது அதிகாரமின்மைக்கு காரணமாக அமையும் அனைத்து காரணிகளையும் நீக்கி பெண்கள் தமது தன்னம்பிக்கையை அதிகரிப்பதற்காகவும், சுயமான தேர்வுகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும், சார்ந்து வாழ்வதைத் தவிர்த்து அதனை ஒழிப்பதற்கு உதவும் வளங்களை முறையாகக் கையாள்வதற்கும் அவர்களை தகைமைப்படுத்தும் செயற்பாடாகும் என ஹக் போன்றோர் (2011)[16] குறிப்பிடுகின்றனர்.

மகளிர் வலுவூட்டலின் அளவுகோல்களாக பொருளாதாரப் பங்கேற்பு, பொருளாதார வாய்ப்புக்கள், அரசியல் அதிகாரம், கல்வி அடைவுகள் மற்றும் ஆரோக்கிய வாழ்வு போன்றவற்றை நாஸ் போன்றோர் (2010)[17] குறிப்பிடுகின்றனர்.
அதேபோல் சுயமாக இயங்கும் இயலுமை, தீர்மானமெடுக்கும் சக்தி, சுய அதிகாரம், வீட்டுச் சொத்துக்களின் உரிமை, ஆதிக்கத்துக்கு எதிரான சுதந்திரம், விழிப்புணர்வு, பொது மற்றும் அரசியல் நிகழ்வுகளுடனான பங்கேற்பு, குடும்பத்தின் வருவாய்க்கான பங்களிப்பு, மகப்பேற்றுடன் தொடர்புபட்ட உரிமைகள், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களில் பங்கேற்றல் போன்றவற்றை மகளிர் வலுவூட்டலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளாக (indicators) பிஸ்வாஸ் மற்றும் கபீர் (2004)[18] ஆகியோர் அடையாளப்படுத்தியுள்ளனர்.

பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம் கல்வி, திறன்கள், போதிய சம்பளம், சொத்துரிமை, சமூகப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான வேலைச் சூழல் போன்றவற்றைச் சார்ந்திருப்பதாக பாத்திமா (2020)[19] விபரிக்கிறார். எனவே, பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதில் அவர்களின் கல்வி மற்றும் வருமானமீட்டுவதற்கான சந்தர்ப்பங்கள் அல்லது தமது வீடுகளுக்கு வெளியே தொழிலில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவது அவசியமானதாகும் எனக் கொள்ள முடியும் (Kabir, 2007)[20].

## பெண்களின் பொருளாதார மேம்பாடு

பெண்களின் பொருளாதார ரீதியான மேம்பாடு தொடர்பான இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவின் வழிகாட்டுதல் தொடர்பில் ஆராய்வது மிக முக்கிய விடயமாக நோக்கப்படுகிறது (Fatima, 2020)[19]. ஏனெனில் 2015 ஆம் ஆண்டின் குடிசன தொகைமதிப்புக் கணக்கீட்டின்படி உலகில் மிக வேகமாக வளரும் சமயக் குழுவினராக அடையாளப்படுத்தப்படும் முஸ்லிம்களில் 500 மில்லியனுக்கு அதிகமான பெண்கள் 45 முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் வசிக்கும் அதேவேளை 30 க்கு மேற்பட்ட நாடுகள் குறிப்பிடத்தக்களவு முஸ்லிம் சிறுபான்மையினரை உள்ளடக்கியுள்ளது. 15-64 வயதுக்கிடைப்பட்ட முஸ்லிம் பெண்கள் உலகின் மொத்த சனத்தொகையில் 8% ஆகக் காணப்படும் அதேவேளை 7.3 பில்லியன் எனும் உலகின் மொத்த சனத்தொகையில் அனைத்து வயதினரையும் சார்ந்த முஸ்லிம் பெண்கள் ஏறத்தாள 12% ஆகக் காணப்படுகின்றனர் எனக் கூறும் அஸீத் மற்றும் வட்த்பெட் (2020)[21] ஆகியோர் முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதனால் பொருளாதார வளர்ச்சி மற்றும் தாம் சார்ந்திருக்கும் சமூகத்தின் மேம்பாட்டில் காத்திரமான பங்களிப்புக்களை ஆற்ற வேண்டியுள்ளதாக வாதிடுகின்றனர்.

ஒரு பெண் மகள், சகோதரி, மனைவி, தாய் போன்ற பல்வேறு பாத்திரங்களிலும் கௌரவப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தும் இஸ்லாம் நேர்த்தியான சமூக உருவாக்கத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் மிக முக்கியமானவர்கள் எனும் கருத்தை குறிப்பிடுகிறது (Lone et al., 2015)[7]. அந்தவகையில் ஏனைய சமூகங்களையும் சமயங்களையும் போலன்றி இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னா ஆகியவை சொத்துரிமை, வாரிசுச் சொத்துரிமை மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடல் போன்ற பெண்களுக்கான பல்வேறு பொருளாதாரம் சார் உரிமைகளை உத்தரவாதப்படுத்தியுள்ளன (Azid & Ward-Batts, 2020)[21]. வீட்டுப் பராமரிப்புடன் தொடர்புபட்ட பொறுப்புக்களை பெண்களுக்கும், வீட்டுக்கு வெளியில் உள்ள பொறுப்புக்களை ஆண்களுக்கும் வழங்கும் இஸ்லாம் பெண்கள் வீட்டில் ஆற்றும் கடமைகளை ஆண்களின் கடமைகளுக்கு

நிகரான பொருளாதாரப் பெறுமானம் கொண்டவையாகவே நோக்குகிறது என விபரிக்கும் இஸ்லாஹி மற்றும் அஸீத் (2020)[22] ஆகியோர் இதனாலே, பெண்களுக்கான பொருளாதார ரீதியான பொறுப்பை ஆண்களின் மீது சுமத்தியிருப்பதாகவும் வாதிடுகின்றனர். எனினும் ஆண்கள் மீது சுமத்தப்பட்டுள்ள இப்பொறுப்பு மேலதிகமானதாகும் எனக் குறிப்பிடும் பாத்திமா (2020)[19] மனைவியின் பணத்தை அல்லது சொத்தை அவளது அனுமதியின்றி பயன்படுத்துவதற்கான உரிமை கணவருக்கு வழங்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

இவ்வாறு ஆண், பெண் ஆகியோரின் பொறுப்புக்களும் கடமைகளும் பிரிக்கப்பட்டுள்ளமையானது இயல்பான சூழ்நிலைகளின் போதே ஏற்புடையதாகும் எனக் குறிப்பிடும் இஸ்லாஹி மற்றும் அஸீத் (2020)[22] ஆகியோர் அவசர அல்லது விஷேட நிலைகளின் போது குறித்த வகிபாகங்களில் மாற்றம் ஏற்பட வாய்ப்பிருப்பினும் எத்தகைய சூழ்நிலைகளிலும் ஒரு பெண் தனக்கோ அல்லது தனது குடும்பத்தினருக்கோ செலவிட அவசியமில்லை எனவும் வலியுறுத்துகின்றனர். அதாவது ஒரு பெண்ணுக்கான பொருளாதார ரீதியான ஆதரவை வழங்குவது திருமணத்துக்கு முன்னர் அவளது தந்தையினதும், திருமணத்துக்குப் பின்னர் கணவரினதும், அவ்விருவரும் இல்லாத பட்சத்தில் நெருங்கிய உறவினரினதும் பொறுப்பாகும். இவ்வாறு எவரும் இல்லாத பட்சத்தில் அவளுக்கான பொறுப்பை ஏற்பது சமூகத்தின் அல்லது அரசின் கடமையாகும் என்பதே இவர்கள் குறிப்பிட முனையும் கருத்தாகும்.

எனவே, ஒரு பெண் கணவரை விட வசதியானவளாக இருப்பினும் அவளைப் பராமரிக்கும் பொறுப்பு கணவரைச் சார்ந்ததாகும். அந்தவகையில் வாரிசு சொத்துப்பங்கீட்டில் ஆணின் அரைப் பாகமே பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டும் எனும் சட்டம் அல்குர்ஆன் 4:11[23] இல் குறிப்பிடப்பட்டிருப்பதானது பெண்களின் அந்தஸ்தைக் குறைப்பதற்கானதல்ல. மாறாக அது ஆண்களின் மீதுள்ள பொறுப்புக்கான மேலதிக உதவியாகவே கொள்ள வேண்டியுள்ளது எனும் விடயம் தெளிவாகிறது (Sultana et al., 2015)[15]. அதேபோல் இஸ்லாம் பெண்களுக்கு வாரிசுரிமையை உத்தரவாதப்படுத்தியுள்ளமை வருமானமீட்டல் மற்றும் ஏனைய பொருளாதாரச் செயற்பாடுகளில் பெண்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான வழியைத் தோற்றுவிக்கவல்லது என அலி போன்றோர் (2011)[6] கருதுகின்றனர்.

எனினும் ஒரு முஸ்லிம் பெண்ணுக்கு பொருளாதார ரீதியாக உதவுவதற்கு யாரும் இல்லாத நிலையில் அவள் தனது வாழ்வுக்காகவும் தன்னை சார்ந்திருக்கும் குடும்பத்தினருக்காகவும் சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தின் போது அவள் தொழிலில் ஈடுபடுவது கட்டாயமான ஒன்றாகவே கொள்ள வேண்டியுள்ளதாக அல்-கஸ்ஸாலி (1993)[24] குறிப்பிடுகின்றமையானது பெண்களின் மீதும் பொருளாதாரச் சுமை சுமத்தப்படுவதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்கவல்லதாகும். அல்குர்ஆன் 2:233[23] மற்றும் 65:6[23] ஆகியவற்றில் ஒரு ஆண் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கான செலவீனங்களைப் பொறுப்பேற்க வேண்டும் எனக் வலியுறுத்தப்பட்டிருப்பது பெண்களின் தொழில்வான்மை மிகக் குறைவாக உள்ள ஆணாதிக்கம் மேலோங்கியுள்ள சமூகச் சூழலுக்கே மிகப் பொருத்தமானது என கமாலி (2020)[25] குறிப்பிடுவதும் இக்கருத்தை மேலும் வலுவூட்டுகிறது.

பொதுவாக ஆண்களின் மீதுள்ள பொருளாதாரச் சுமையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வாரிசுரிமைச் சொத்துப்பங்கீட்டில் பெண்களை விட மேலதிகமாக சொத்து வழங்கப்பட வேண்டும் எனும் நியாயத்தை அடிப்படையாகக் கொண்டு அப்துல்லாஹ் போன்றோர் (2014)[11] மாறி வரும் சமூகச் சூழலில் பொருளதார ரீதியாக பெண்களின் வகிபாகம்

ஆணை விட அதிகமாகக் காணப்படும் போது வாரிசுச் சொத்துப்பங்கீட்டில் ஆண்களை விட அதிகமாக பெண்களுக்கு சொத்து வழங்கப்படுவதே இஸ்லாம் போதிக்கும் சமூக நீதிக் கோட்பாட்டுக்கு ஏற்புடையதாகும் என தமது ஆய்வில் வாதிடுகின்றமையானது பெண்களின் பொருளாதார ரீதியான பங்களிப்புக்கு ஏற்ப அவர்களின் சமூகப் பாதுகாப்பு அமையப்பெற வேண்டும் எனும் கருத்தை பிரஸ்தாபிக்கிறது.

உண்மையில் வசதியுள்ள பல பெண்களும் பல்வேறு வீட்டு வன்முறைகளுக்கு உட்படுகின்றமையினால் பொருளாதார ரீதியாக பெண்கள் வலுவூட்டப்படுவது அவர்களின் பாதுகாப்பு உத்தரவாதத்துக்கான அளவுகோளாகக் கொள்ளப்பட முடியாவிடினும் பெண்கள் கல்வி மற்றும் பொருளாதார ரீதியாக மேம்படுத்தப்படுவதானது அவர்களின் சமூகப் பாதுகாப்புக்கு உறுதுணையாக அமையவல்லது எனும் கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும் என கபீர் (2007)[20] விபரிக்கிறார்.
இங்கு இன்னுமொரு விடயமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதாவது இஸ்லாத்துக்கு முற்பட்ட அரேபியாவில் பெண்களுக்கான சொத்துரிமை முற்றாக மறுக்கப்பட்ட போதும் ஒரு பெண் மனைவி, தாய், பிள்ளை, சகோதரி போன்ற பல்வேறு நிலைகளில் அவளுக்கான வாரிசுச் சொத்துப்பங்கீடு தொடர்பில் இஸ்லாம் குறிப்பிட்டுள்ளது என அல்-ஷல்தூனி (2019)[26] குறிப்பிடுகிறார்.

எனினும் நபி (ஸல்) அவர்களின் முதல் மனைவியான கதீஜா (ரழி) அவர்கள் அக்காலத்தில் மரணித்த தனது கணவரின் ஊடாக பெருமளவு சொத்துக்களைப் பெற்றுக் கொண்டார் எனும் கருத்தைக் குறிப்பிட்டு இஸ்லாத்துக்கு முற்பட்ட அரேபியாவில் பல்வேறு சமூக அந்தஸ்துடையவர்களாக பெண்கள் வகைப்படுத்தப்பட்டிருந்ததாகவும் இவ்வாறான பிரச்சினைகளின் போது இவ்விவகாரம் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் அவளது மரணித்த கணவரின் கோத்திரத்தைச் சார்ந்த அல்லது அவளது உறவினர்களில் ஆண்களிடமே காணப்பட்டது எனும் கருத்தை எல்கவ்ஸி (2010)[27] குறிப்பிடுவதானது அக்காலத்தில் பெண்களுக்கான சொத்துரிமை முழுமையாக மறுக்கப்பட்டது எனும் கருத்தை பிரஸ்தாபிக்காவிடினும் இறந்த உறவினர்களிடம் இருந்து சொத்துக்களைப் பெறுவதில் பெண்கள் பல்வேறு தடைகளை எதிர்கொண்டுள்ளமையை உறுதிப்படுத்துகிறது.

மேலும் பண்டைய யூத சமூகம் பெண்களை தீமையின் வாயிலாக நோக்கியதோடு அவர்களுக்கு எவ்வகையான வாரிசுரிமை சொத்துக்களையும் வழங்காமை, பண்டைய பாபிலோனிய சமூகம் ஆண் உறவினர்கள் இல்லாத சூழ்நிலைகளில் மாத்திரமே பெண்களுக்கு வாரிசுச் சொத்தை வழங்கியமை மற்றும் மெசபத்தேமிய சமூகத்தில் ஏனைய சொத்துக்களைப் போன்ற ஒரு சொத்தாகவே பெண் நோக்கப்பட்டமை போன்ற பல்வேறு பாகுபாடுகள் பண்டைய சமூகங்களில் பெண்களின் வாரிசு சொத்துரிமைக்கு எதிராக நடைமுறையில் நிலவி வந்ததாக ஹக் போன்றோர் (2020)[28] குறிப்பிடுகின்றமையானது இஸ்லாத்தின் வருகைக்கு முன்னர் இவ்விடயம் தொடர்பில் பெண்களுக்கு எதிரான அநீதி பல்வேறு சமூகங்களில் நிலவி வந்துள்ளமையை உணர்த்துகிறது.

அதேபோல் கோட்பாட்டு ரீதியாக நோக்கும் போது இந்துச் சட்டத்தை விட இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் பெண்களின் உரிமையைப் பாதுகாப்பதாக பல்வேறு ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர் என எக்னஸ் (1996)[29] விபரிப்பது, நவீன காலத்திலும் பொருளாதார ரீதியாக பெண்களின் சொத்துரிமையை வலியுறுத்துவதில் இஸ்லாமிய வாரிசுரிமைச் சொத்துப்பங்கீட்டின் வகிபாகத்தை தெளிவுபடுத்துகிறது. அத்துடன் இஸ்லாமிய வாரிசுரிமை பங்கீடுகள் தொடர்பான

விடயங்களை உள்ளடக்கி இலங்கையில் 1931 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க பாராளுமன்றக் கட்டளைச் சட்டம் "முஸ்லிம் மரண சாசணமில்லா வழியுரிமை சட்டம்" (Act No. 10 of 1931 Muslim Intestate Succession Ordinance) எனும் பெயரில் தற்போது நடைமுறையிலுள்ளமையானது (Mawoon, 2012)[30] இலங்கையில் இச்சட்டத்துக்கிணங்கவும் முஸ்லிம் பெண்களுக்கு இஸ்லாமிய வாரிசுரிமைப் பங்கீட்டுக்கிணங்க சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை சட்ட ரீதியாகவும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளமைக்கான சான்றாக அமையப்பெற்றுள்ளது.

மேலும் இஸ்லாம் பெண்களுக்கு உத்தரவாதப்படுத்திய பிரத்தியேக பொருளாதார உரிமையாக நோக்கப்படும் மஹர் இஸ்லாமிய சட்டத்துறை மாத்திரம் வலியுறுத்திய பெண்களுக்கான உரிமையாக நோக்கப்படுவதாக எக்னஸ் (1996)[29] குறிப்பிடுகிறார். இதன் அளவைத் தீர்தானிக்கும் உரிமையும் அதனை அனுபவிக்கும் ஏகபோக உரிமையும் முழுமையாகப் மணப் பெண்ணைச் சார்ந்திருப்பதனால் (Nisthar, et al., 2017)[3] இதனை பொருளாதார ரீதியாக பெண்களை ஸ்திரப்படுத்துவதற்கான முக்கிய வழிகளுள் ஒன்றாகக் கொள்ள முடியும் என வானி (2001)[31] கருதுகிறார். இஸ்லாத்துக்கு முற்பட்ட அரேபியாவில் திருமணத்தின் போது மணப் பெண்ணின் தந்தை, பாதுகாவலர் அல்லது ஏனைய ஆண் உறவினர்களிடம் வழங்கப்படும் "கொள்வனவு விலை"யாகவே இதன் நடைமுறை காணப்பட்டது (Tirkey, 2020)[32]. இதனை ஒழித்து பெண்களை கௌரவிக்கும் முகமாக இஸ்லாம் அறிமுகப்படுத்திய மஹரானது முஸ்லிம்களின் திருமணங்களில் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும் (Singh, 2010)[33].

உடனடியாகவோ தாமதமாகவோ, பணமாகவோ பொருளாகவோ வழங்கப்பட முடியுமான இம்மஹரை பெறுவதைக் கவனத்தில் கொண்டு திருமணத்தின் போது (பெறுமதி) தெளிவாக வரையறுத்துக் குறிப்பிடப்படும் மஹர் மற்றும் மணப் பெண்ணின் குடும்பத்தின் சமூக அந்தஸ்து, அவளது தகைமைகள் போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு நிர்ணயிக்கப்படும் மஹர் (Tirkey, 2020)[32] என பிரதான இரு வகைகளாக இஸ்லாமிய அறிஞர்கள் இதனை வகைப்படுத்தியுள்ளமையானது அனைத்து நிலைகளிலும் பெண்கள் இதனைப் பெறுவதற்கான உத்தரவாதமாக அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். நபி (ஸல்) அவர்கள் ஒரு பெண்ணைத் திருமணம் முடிக்க விரும்பிய நபரிடம் "இரும்பினாலான மோதிரத்தையேனும் தேடிக்கொள்" (அதனையேனும் மணப்பெண்ணுக்கு மஹராகக் கொடு) (புகாரி, 5132; முஸ்லிம், 1425) எனக் குறிப்பிட்டமையும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது (Faiz-ud-din, 2012)[34].

மேலும் தாமத மஹரானது தம்பதியினர் விவாகரத்துக் கோரும் போது கணவரால் வழங்கப்பட வேண்டியுள்ளமை மற்றும் கணவர் மரணிக்கும் போது அவரது சொத்திலிருந்து மஹர் மனைவிக்கு வழங்கப்பட்ட பின்னரே அவரது சொத்துக்கள் உரியவர்களுக்கு பங்கிடப்பட வேண்டியுள்ளதோடு மஹர் தொகை அவரது சொத்தை விட அதிகமானதாகக் காணப்படுமாயின் குறித்த கணவரின் வாரிசுதாரர்களிடமிருந்து மீதியைப் பெற்றுக் கொள்வதற்கு அப்பெண் உரித்துடையவளாவாள் எனும் கருத்தை முகம்மத் மற்றும் லெஹ்மன் (2011)[35] ஆகியோர் வலியுறுத்துவதானது பெண்களின் பொருளாதார உரிமையைப் பெறுவதற்கான உத்தரவாதமாக அமையப்பெற்றுள்ளது.

எனவே, மஹர் பெறுவதிலும் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு உட்பட்டு அதனை தனது சுய விருப்பத்துக்கு ஏற்ப பயன்படுத்துவதிலும் பூரண சுதந்திரத்தை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ளமையானது (Patoari, 2019)[13] பொருளதார ரீதியாக பெண்களின் வலுவூட்டலுக்கான முக்கிய வழிகளுள் ஒன்றாகக் கொள்ள முடியும்.

**பொருளாதாரச் செயற்பாடுகளுடனான ஈடுபாடு மற்றும் பொருளாதாரத் தற்சார்பு**

உண்மையில் அல்குர்ஆன் 4:34[23] வசனத்துக்கான பொருட்கோடல் தொடர்பில் தப்ஸீர் கலை அறிஞர்களுக்கிடையே ஏற்பட்ட மாறுபட்ட கருத்துக்கள் இஸ்லாத்தில் பெண்களின் பொருளாதார உரிமைகள் தொடர்பான விவாதங்களுக்கு அடிப்படையாக அமைந்தன (Wing, 2006)[36]. இவ்வசனம் ஆண்கள் பெண்கள் மீது அதிகாரம் கொண்டுள்ளமையைக் குறிப்பதாக சிலர் வாதிடுகின்றனர். எனினும் ஆண்களின் உடல் வலிமை மற்றும் குடும்பத்தினருக்காக செலவிடும் கடமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் மீதுள்ள பெண்களைப் பாதுகாக்கும் பொறுப்புடமையையே இவ்வசனம் குறிப்பிடுகிறது என கியா (2019)[37] பொருட்கோடல் வழங்குகிறார்.

ஆண், பெண் ஆகிய இருவரில் கூடிய அதிகாரம் பெற்றவர் யார் என்பது தொடர்பில் அல்குர்ஆனில் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிடப்படாமையை சுட்டிக்காட்டும் முஹ்ஸின் (1999)[38] அல்குர்ஆன் 4:11[23] இல் பாகப்பிரிவினையில் ஆண்களுக்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளமையே 4:34[23] எனும் வசனத்தில் பெண்களை விட ஆண்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பம்சமாகும் என தெளிவுபடுத்துகின்றமையும் பெண்களின் மீது ஆண்கள் அதிகாரம் படைத்தவர்கள் எனும் பொருட்கோடலை வலுவிழக்கச் செய்கிறது.

மேலும் அவ்வசனத்தில் பெண்களுக்கான செலவீனங்கள் ஆணைச் சார்ந்ததாகும் எனும் பாரம்பரியப் பொருட்கோடலில் பெண்களை விட ஆண்கள் சிறந்தவர்களும், பெண்ணுக்கான செலவீனங்களைப் பொறுப்பேற்பது ஆணின் கடமை எனும் கருத்தும் மறைமுகமாக குறிப்பிடப்படுகிறது எனக் குறிப்பிடும் Muslim Women's League (1995)[39] இதனால் பெண்களின் தொழிற்துறை ஈடுபாடு பாதிக்கப்படக் கூடும் என வாதிடுகின்றனர். பெண்கள் சம்பாதித்தவை அவர்களுக்கு உரித்தானவையாகும் எனக் குறிப்பிடும் அல்குர்ஆன் 4:32[23] வசனம் அவர்களுக்கு வழங்கப்படும் மஹரை அல்லது வாரிசுச் சொத்தையே குறிக்கிறது (Kamali, 2020)[25] எனும் சில அல்குர்ஆனிய விரிவுரையாளர்களின் பொருட்கோடல் இக்கருத்தை மறைமுகமாக வலுவூட்டுகிறது.

ஆயினும் அல்குர்ஆன் 4:32[23] வசனம் பெண்கள் தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமையை வலியுறுத்துவதாக அல்-தபரி (2000)[40] கருதுகிறார். இக்கருத்தே மிகப் பெரும்பான்மையான இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தாகும் (Wing, 2006)[36]. அதேபோல் அல்குர்ஆன் 28: 23[23] இல் இறைதூதரான ஷுஐப் (அலை) அவர்களின் இரு புதல்விகள் மந்தை மேய்ப்பில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்டுள்ளமையானது பெண்கள் இஸ்லாமிய வரையறைகளுக்கு உட்பட்டு பயன்மிக்க செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான அனுமதிக்கான சான்றாகும் எனக் குறிப்பிடும் எல்சோபாகி (2006)[41] வாழ்வாதாரத்தைத் தேடிக் கொள்ளும் நோக்கில் தொழிலில் அவர்கள் ஈடுபடுவதும் அவற்றுள் ஒன்றாகும் என வாதிடுகிறார். அதாவது பெண்கள் வியாபாரம், விவசாயம், கைத்தொழில் மற்றும் ஏனைய உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபட இஸ்லாம் பெண்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது (Kounsar, 2017)[42].

முஸ்லிம் பெண்கள் தொழிலில் ஈடுபடுவது தொடர்பான வரலாற்று நடைமுறை தொடர்பில் ஹமீதுல்லாஹ் (1992, p.115)[43] "இஸ்லாமிய வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் முஸ்லிம் பெண்கள் தமது இயல்புகளுக்கேற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. அவர்கள் தாதிகளாகவும் ஆசிரியர்களாகவும் தேவையேற்படும்போது போர்க் களங்களில் ஆண்களுடன் இணைந்தும் சேவையாற்றியுள்ளனர்"

எனக் குறிப்பிடுகின்றமையானது இஸ்லாமிய வரலாற்றில் பெண்கள் பொருளாதார ரீதியாக குறிப்பிடத்தக்களவு பங்களிப்புக்களை ஆற்றியுள்ளனர் எனும் கருத்தை பிரஸ்தாபிக்கிறது.

நபி (ஸல்) அவர்கள் பெண்களுக்கு தொழிலில் ஈடுபட்டு வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் உரிமைக்கான அனுமதியை வழங்கினார்கள் (Nisthar et al., 2017)[3]. விவாகத்துப் பெற்ற பெண்ணொருவர் இத்தாக் காலத்தில் (கணவரைப் பிரிந்த பெண்கள் தம்மைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டிய பிரத்தியேகமான காலப்பகுதி) தனக்குச் சொந்தமான விவசாய பூமியில் தனது பேரீத்தம்பழ மரங்களை பராமரிப்பதற்கான அனுமதி தொடர்பில் நபியவர்களிடம் வினவியபோது “நீர் (வீட்டிலிருந்து) வெளியேறிச் சென்று உமது பேரீத்தம்பழ மரங்களைக் பராமரியுங்கள். அதனூடாக தர்மங்களையோ அல்லது (வேறேதேனும்) நல்ல விடயங்களையோ உம்மால் செய்ய முடியும்” (முஸ்லிம், 1483; அபூ தாவூத், 2297) என அப்பெண்ணிடம் குறிப்பிட்டமையானது அன்றாட வாழ்வாதாரத்துக்குத் தேவையானவற்றை தேடிக்கொள்வதற்கான உரிமையை பெண்களுக்கும் இஸ்லாம் வழங்கியுள்ளமையை தெளிவுபடுத்துகிறது (Anggadwita et al., 2015)[44].

இஸ்லாத்தின் ஆரம்ப காலப்பகுதிகளிலும் பெண்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளமையை வரலாற்றை ஆராய்வதனூடாக அறிய முடிகிறது. நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் அபூ பக்ர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்திலும் (பாய்) பின்னலில் கவ்லா பின்த் கய்ஸ் (ரழி) எனும் பெண் ஈடுபட்டமை (Al-Hindhi, 1949)[45] சலாமா பின்த் அல்ஹுஃர்ரு எனும் பெண் ஆடு மேய்ப்பில் ஈடுபட்டமை (அல்முஃஜம் அல்கபீர், 781), அஸ்மா பின்த் உமைஸ் எனும் பெண் தோல் பதனிட்டமை (அஹ்மத், 27086), ஹலீமா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கும் (இப்னு ஹிப்பான், 2094) மற்றும் உம்மு புர்தா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் மகனான இப்ராஹீம் அவர்களுக்குப் பாலூட்டியமை (Al-Asqalani, 1994)[46] என்பவற்றினூடாக செவிலித்தாய்மாராக செயற்பட்டமை (El-Shobaky, 2006)[41] போன்ற பல நடைமுறைகள் பொருளாதாரச் செயற்பாடுகளில் பெண்களின் பங்குபற்றுதலை விபரிப்பனவையாக அமைந்துள்ளன.

அல்குர்ஆனில் “தவிர ஒரு செவிலித்தாயைக் கொண்டு உங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்ட விரும்பினால் அதில் உங்களுக்கு ஒரு குற்றமுமில்லை. ஆனால், (அக்குழந்தையின் தாய்க்கு உங்களிடமிருந்து) சேர வேண்டியதை முறைப்படி செலுத்திவிட வேண்டும்;” (2: 233)[23] எனும் வசனத்தில் வாடகை முறையில் பால்குடித் தாயை நியமிக்கும் அனுமதி உண்டு எனவும் அவளுக்கான ஊதியம் வழக்காற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமையானது பெண்கள் தாம் ஈடுபடும் உத்தியோகங்களில் போதிய அளவு ஊதியத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படையாக அமையப்பெற்றுள்ளது (Azid & Ward-Batts, 2020)[21].

அதேபோல் பிரபல நபித்தோழியர்களுள் ஒருவரும் அபூ ஸுஃப்யான் (ரழி) அவர்களின் மனைவியுமான ஹிந்த் பின்த் உத்பா எனும் பெண் புதிய தொழில் ஒன்றை ஆரம்பிக்கும் முனைப்பில் அரசாங்கத் திறைசேரியிலிருந்து (பய்துல் மால்) வட்டியற்ற கடனைக் கோரியபோது குறித்த வியாபாரம் வெற்றியடையும் பட்சத்தில் அது பல்வேறு புதுத் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் என்பதோடு அவரால் அக்கடனையும் இலகுவாகத் திருப்பிச் செலுத்தி விடவும் முடியும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட்டு அக்கடன் அவருக்கு வழங்கப்பட்டது எனும் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு அஸீத் மற்றும் வட்த்பெட் (2020)[21] ஆகியோர் கடன் கோரியவர் ஆணா? பெண்ணா என்பது இங்கு கவனத்தில் கொள்ளாது கடன்

கோரிய தொழில் முனைவாளரின் முகாமைத்துவ ஆற்றல் குறித்த தொழிலின் வெற்றியில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிதாகும் என்ற வகையில் திறைசேரி அவரது முகாமைத்துவத் திறன்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளமை கடன் வழங்கப்படும் போது கவனத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள் ஊடாகப் புலப்படுவதாக விபரிக்கின்றனர்.

மற்றுமொரு பிரபல சஹாபியப் பெண்ணும் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்களின் மனைவியுமான ஸனைப் பின்த் அபீ முஆவியா என்பவர் கைத்தொழிலில் ஈடுபடும் பிரபல வர்த்தகராகக் காணப்பட்ட அதேவேளை அதனூடாகத் தனக்குக் கிடைக்கப் பெறும் வருமானத்தினூடாக இறைதூதரின் அனுமதியுடன் வறிய நிலையிலிருந்த தனது கணவர் மற்றும் பிள்ளைகளையும் பராமரித்து வந்தமையானது (Azid & Ward-Batts, 2020)[21] குடும்பப் பராமரிப்பில் பொருளதார ரீதியான பெண்களின் பங்களிப்புக்களை தெளிவுபடுத்துகிறது.

முழு சமூகத்துக்கும் பயனளிக்கும் வகையிலான ஆற்றலும் திறமையும் பெண்களிடம் காணப்படும்போது அவர்களால் ஆற்ற முடியுமான பங்களிப்பு தாய்மை மற்றும் வீட்டை பராமரித்தல் ஆகியவற்றுக்கு நிகரானதாக நோக்கப்பட முடியுமானதாகும் என அபீபி (1980)[47] குறிப்பிடுவது பெண்கள் தொழில் மற்றும் உத்தியோகங்கள் ஊடாகவும் அந்நிலையை உருவாக்க முடியும் என்பதை சுட்டுகிறது.

இஸ்லாமிய வரலாற்றிலும் இந்நடைமுறை நிலவி வந்துள்ளது. நபி (ஸல்) காலத்தில் ஆயிஷா (ரழி), உம்மு அய்மன் (ரழி), ஹம்னா பின்த் ஜஹ்ஷ் (ரழி), உம்மு ஸுலைம் (ரழி), உம்மு அதிய்யா (ரழி) போன்ற பலர் போரின்போது படை வீரர்களுக்கு உணவு தயாரித்தல், நீர் புகட்டல் மற்றும் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்தல் (தாதிகள்) (புகாரி, 2880; முஸ்லிம் 1811, 3380; மஜ்மஃ அல்ஸவாஇத், 15424) மற்றும் ஷிபா பின்த் அப்தில்லாஹ் எனும் பெண் குறிப்பாக தோல் நோய்களுடன் தொடர்புபட்ட நோய்களுக்கு மருத்துவமளித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளமையானது பெண்களின் இயல்புகளுக்கு ஏற்ற உத்தியோகங்களில் பங்கு கொண்டுள்ளமையை விபரிப்பனவையாக அமையப்பெற்றுள்ளன என ரஜப் (2007)[48] குறிப்பிட்டாலும் பெண்கள் சமயம், தாதி மற்றும் ஆசிரியர் பயிற்சி, மனைப் பொருளியல் (home economics) பெண்களுடன் தொடர்பான மருத்துவம் போன்ற அவர்களுக்குப் பொருந்தும் விடயங்களையே கற்க வேண்டுமென சில இஸ்லாமிய அறிஞர்கள் வாதிடுவதானது (Wing, 2006)[36] பெண்களின் இனப்பெருக்க இயலுமையே அவர்களின் முக்கிய பணியாகும் எனக் கருதுவோரின் குறுகிய நோக்காகும் என விமர்சிக்கும் ஷஹாதா (2003)[49] இவ்வாறானவர்கள் பெண்களின் சமூக நிலையை மேம்படுத்தும் அனைத்து வகையான முயற்சிகளையும் இஸ்லாத்துக்கு முரணான செயற்பாடாகவே நோக்குவதாக வாதிடுகிறார்.

அத்துடன் சுகாதார மற்றும் கல்விச் சேவைகள் போன்ற பெண்களின் இயல்புகளுக்குப் பொருத்தமான செயற்பாடுகள் பெண்களின் மீது பர்ள் கிபாயாவாகும் எனப் பிரபல ஹனபி மத்ஹப் அறிஞரான இப்ன் அல்ஹம்மாம் மற்றும் சில அறிஞர்கள் குறிப்பிடுவதானது (Kamali, 2020)[25] அச்செயற்பாடுகளில் பெண்களின் பங்குபற்றுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

நபியவர்களின் மனைவியர்களான ஆயிஷா (ரழி), ஹப்ஸா (ரழி), உம்மு ஸலமா (ரழி), ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) போன்றோரும் நபியவர்களின் மகளான பாத்திமா (ரழி), அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரழி) போன்றோரும் இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த பல்வேறு ஹதீஸ்களை அறிவித்ததோடு இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த பல்வேறு விவகாரங்களுக்கான தீர்ப்புக்களை

வழங்குவோராகவும் காணப்பட்டனர். கன்ஸா (ரழி), ஷைமா பின்த் அல்ஹாரிஸ் (ரழி), ஆதிகா பின்த் ஸைத் (ரழி) போன்றோர் இலக்கியத்துறையிலும் ஷிபா பின்த் அப்தில்லாஹ் எனும் பெண் கற்பித்தல் மற்றும் மருத்துவ துறைகளிலும் பிரபலம் பெற்றவர்களாவர் (Muhammad, 2013)[50]. மேற்கூறப்பட்ட விடயங்கள் அறிவியல் மற்றும் பல்வேறு கலைகளுடன் தொடர்புட்ட விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கான உரிமையை அக்காலத்தில் பெண்கள் அனுபவித்து வந்தமையை விபரிக்கின்றன.

அதேபோல் இஸ்லாமிய வரலாற்றில் பல ஆண் மாணவர்கள் பெண் ஆசிரியர்களிடம் சென்று கற்றுள்ளமைக்கான பல்வேறு சான்றுகள் உண்டு. இஸ்லாமிய சட்டத்துறை அறிஞரான இமாம் ஷாபிஈ அவர்கள் நபீஸா எனும் பெண்ணின் மாணவராவார். பிரபல முஸ்லிம் தேச சஞ்சாரியான இப்னு பதூதா உலகின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த ஆசிரியைகளின் மாணவராவார். அத்துடன் பிரபல முஸ்லிம் அறிஞர்களான இமாம் அபூ ஹனீபா மற்றும் இமாம் தபரி ஆகியோர் பெண்கள் நீதிபதிகளாக (காழி) நியமிக்கப்பட முடியும் எனும் கருத்தைக் கொண்டிருந்தனர் (Azid & Ward-Batts, 2020)[21].

அத்துடன் ஆரம்பகால இஸ்லாமிய வரலாற்றில் பெண்கள் தேர்ச்சி பெற்றிருந்த துறைகளுள் மருத்துவமும் ஒன்றாகும். எடுத்துகாட்டாக நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ருபைதா பின்த் ஸஃத் அல்அஸ்லமிய்யா எனும் பெண் காயங்களுக்கு வைத்தியம் செய்வதில் தேர்ச்சி பெற்றுக் காணப்பட்டார். இவர் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இடம்பெற்ற அகழிப் (கந்தக்) போரில் காயமுற்ற ஸஃத் பின் முஆத் எனும் நபித்தோழரின் காயங்களுக்கு மருந்திட்டு தேவையான சிகிச்சைகளையளித்தார். அதுமாத்திரமன்றி காயப்பட்டவர்களுக்கும் நோயாளிகளுக்கும் தேவையான சிகிச்சைகளை வழங்க மஸ்ஜித் அந்நபவியில் இவருக்கென பிரத்தியேகமான ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது (El-Shobaky, 2006)[41].

அதேபோல் ஷிபா பின்த் அப்தில்லாஹ் எனும் நபித்தோழி எழுத்து மற்றும் வாசிப்புத் துறையில் பிரபலம் பெற்ற ஆசிரியராகத் திகழ்ந்தார். நபி (ஸல்) அவர்கள் தனது மனைவியான ஹப்ஸா (ரழி) அவர்களுக்கு எழுதும் முறையை கற்றுக் கொடுக்கும்படி (அபூதாவூத், 3887) அவரிடம் வேண்டிக் கொண்டார்கள் (El-Shobaky, 2006)[41]. உமர் (ரழி) அவர்களின் காலத்தில் அப்பெண் சந்தைப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். சந்தையில் மோசடி, பதுக்கல் போன்ற இஸ்லாமிய அடிப்படைகளுக்கு முரணான நடவடிக்கைகள் தவிர்க்கப்படுவதே இவ்வுத்தியோகத்தின் பிரதான நோக்கமாகும் (Khairat, 1978)[51]. ஸய்னப் அல்அஸ்திய்யா எனும் நபித்தோழி கண் நோய்கள் தொடர்பில் தேர்ச்சி பெற்றவராhகவும் அந்நோய்க்கு சிகிச்சையளிக்கும் மருத்துவராகவும் செயற்பட்டு வந்தார் (El-Shobaky, 2006)[41].

மேலும் வானியல் தொடர்பான பல்வேறு விடயங்களை தனது தந்தையிடமிருந்து கற்றுக் கொண்ட அல்-இஜ்லிய்யா பின்த் அல்-இஜ்லி (العجلية بنت العجلي) எனும் பெண் சிரியாவில் வடிவமைக்கப்பட்ட வானியல் கருவியொன்றின் உருவாக்கத்தில் பெரும்பங்காற்றினார். கடற் பயண வழிகள் (navigation) மற்றும் நேரத்தை கணிப்பிடுவதற்கான உத்திகள் தொடர்பான விடயங்களிலும் இவர் பங்காற்றியுள்ளார். இஸ்லாம் விஞ்ஞான வளர்ச்சியை ஊக்குவித்துள்ளமை மற்றும் ஆண்களைப் போன்று பெண்களும் அறிவைத் தேடுவதை ஊக்குவித்துள்ளமைக்கான சிறந்த எடுத்துகாட்டாக இவரின் பங்களிப்புக்கள் அமையப்பெற்றுள்ளன. தனது தந்தையின் மரணத்தின் பின்னர் அவரது வணிகத்தை இப்பெண் நிர்வகித்ததோடு ஸய்ப் அத்தவ்லா (سيف الدولة) எனும் ஆட்சியாளரின் சபையிலும் பணியாற்றி வந்தார் (Azid & Ward-Batts, 2020)[21].

மேற்கூறப்பட்ட சான்றுகள் அனைத்தும் பொருளாதார ரீதியாக பெண்களின் ஈடுபாட்டை விபரிப்பனவையாக அமையப்பெற்றுள்ளன.

பெண்களின் பொருளாதார தற்சார்பு (economic independence) நிலை தொடர்பான வாதங்களும் தற்காலத்தில் இடம்பெற்றவண்ணமுள்ளன (Huber, 2009)[52]. பொருளாதார ரீதியாக பெண்கள் ஆண்களைச் சார்ந்திருக்கும் நடைமுறை தற்காலத்துக்கு ஏற்புடையதல்ல என சிலர் வாதிடுகின்றனர் (Al-Abed & Hamendi, 2018)[53]. பெண்களின் மீதான ஆதிக்கம் பிரயோகிக்கப்படுவதற்கு அது வழிகோலவல்லது எனக் குறிப்பிட்டு அவர்கள் இக்கருத்தை நியாயிக்கின்றனர் (Ali et al., 2011)[6].

இஸ்லாத்தில் பொருளாதார ரீதியாக பெண்களைப் பராமரிக்கும் பொறுப்பு ஆண்களைச் சார்ந்திருப்பினும் ஆண்களுக்கு நிகரான பொருளாதார உரிமைகள் அவர்களுக்கும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளமை (Azid & Ward-Batts, 2020)[21] பொருளாதார ரீதியாக பெண்கள் சுயமாக இயங்குவதற்கான ஊக்கியாக அமையவல்லதாகும்.

சுதந்திரமாக தனது பணம் மற்றும் ஏனைய உடமைகளை நிர்வகித்தல், விற்றல், வாங்குதல், அடகுவைத்தல், குத்தகை வழங்கல், இரவல் அல்லது கடன் பெறல், ஒப்பந்தங்கள் மற்றும் சட்ட ஆவணங்களில் கையெழுத்திடல், தானம் வழங்கல், நம்பிக்கையாளராக செயற்படல், வியாபாரம் அல்லது நிறுவனத்தை நடாத்தல் போன்ற பல்வேறு பொருளாதார உரிமைகளும் இவற்றுள் அடங்கும் (Ali et al., 2011)[6]. இவ்வுரிமைகள் ஊடாக பெண்களின் நிலை உயர்த்தப்பட்டிருப்பதாக அல்-பாரூகி (1983)[54] தெளிவுபடுத்துகிறார்.

இஸ்லாமிய வரலாற்றில் ஆரம்பகால நடைமுறையும் இக்கருத்தை வலுவூட்டுகிறது. நபி (ஸல்) அவர்களின் மனைவியான கதீஜா (ரழி) அக்காலப்பகுதியில் பிரபலமான வணிகராக அறியப்பட்டிருந்தார். அவர் தனது சொத்துக்களை அக்காலத்தில் குரைஷ் குலத்தில் பிரபலம் பெற்று விளங்கிய சிலரிடம் ஒப்படைத்து வியாபாரத்தின் பின்னர் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை பெற்றார். அத்துடன் மக்காவில் அவருக்கென பல்வேறு வணிக முகவர்களும் தொழிலாளர்களும் இருந்தனர். நபி (ஸல்) அவர்களும் அவரின் பொருட்களை எடுத்துச் சென்று விற்பனை செய்து பெரும் இலாபத்தைப் பெற்று திரும்பி வந்தமையும் (Azid & Ward-Batts 2020)[21] இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது.

மேலும் இக்காலப்பகுதியில் பண்ணை வளர்ப்பு, வணிகம், கட்டுமானம், பொருள் உற்பத்தி, உணவு உற்பத்தி, கற்பித்தல், பொருட்களைக் கொண்டு செல்லல் மருத்துவம் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் பெண்கள் ஈடுபட்டு வந்தமைக்கான பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றமையும் (Ali et al., 2011)[6] இக்கருத்தை மேலும் வலுவூட்டுகிறது. எனினும் பெண்களின் பொருளாதார உரிமைகளுடன் தொடர்பான அல்குர்ஆனிய வசனங்களுக்கு மத்திய காலப்பகுதியில் வழங்கப்பட்ட பொருட்கோடல்கள் பெண்களுக்கு எதிரான பல்வேறு பாகுபாடுகள் தோன்றுவதற்கு வழிகோலியுள்ளதாக விமர்சிக்கும் ஷைக் (2003)[55] இஸ்லாத்தின் மூல ஆவணங்களை மீள்பரிசீலனை செய்வதனூடாக இவற்றுக்கான தீர்வுகளைப் பெற முடியும் எனப் பரிந்துரைக்கிறார்.

ஆயினும் இஸ்லாமிய வரலாற்றில் மத்திய காலப்பகுதியிலும் பெண்கள் பல்வேறு பொருளாதாரம்சார் உரிமைகளை அனுபவித்து வந்துள்ளனர் என அஸீத் மற்றும் வட்பெட் (2020)[21] குறிப்பிடுவது நடைமுறையில் முஸ்லிம் பெண்கள் பல்வேறு பொருளாதார உரிமைகளை

அனுபவித்து வந்துள்ளமையை தெளிவுபடுத்துகிறது. இக்காலப்பகுதியில் முஸ்லிம் உலகில் தொழிற் சந்தைகளில் பெண்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்க அளவு காணப்பட்டதாகக் குறிப்பிடும் ஷெட்ஸ்மிலர் (1997)[56] தொழில் திறன், தேர்ச்சி, பணியாளர் பிரிவு, தொழில் ஈடுபாடு, தொழில் முனைவு போன்ற பல்வேறு விடயங்களில் முஸ்லிம் பெண்கள் அக்கால ஐரோப்பியப் பெண்களை விட பன்மடங்கு சிறந்து விளங்கியதாகவும் விபரிக்கிறார். அதேபோல் இக்காலப்பகுதியில் முஸ்லிம் பெண்கள் உற்பத்தித் துறை மற்றும் சேவைத் துறைகளில் ஈடுபாடு காட்டி வந்தாலும் ஐவுளித் துறையே (textile) பெண்கள் மிக அதிகம் ஈடுபடும் சந்தையை மையப்படுத்திய மிகவும் பிரபலம் பெற்ற துறையாகவும் காணப்பட்டது (Azid & Ward-Batts, 2020)[21].

மேலும் இக்காலப்பகுதியில் தொழிற்சாலைகளில் நெசவு, சாயமிடல், பூத்தையல் (embroidery) போன்றவற்றிலும் பெண்கள் ஈடுபட்டு வந்தனர். வணிகர்கள் அல்லது விவசாயிகள் ஊடாக பெண்கள் மூலப் பொருட்களைப் பெற்று பொருட்களை உற்பத்தி செய்யும் வழமையும் நிலவியமையால் சந்தையுடன் நேரடியான தொடர்பைக் கொண்டிருந்ததோடு சந்தையின் நடப்பு வழக்கு தொடர்பில் நன்கு பரிட்சயம் கொண்டிருந்தனர் (Azid & Ward-Batts, 2020)[21]. மேலும் சிகை அலங்காரமும் இக்காலப்பகுதியல் பிரபலம் பெற்றிருந்த மற்றுமொரு தொழிலாகும். திருமணம் உட்பட பல்வேறு சந்தர்ப்பங்களில் பெண்கள் அதிக வருமானம் ஈட்ட முடியுமான ஒரு தொழிலாக இது இருந்நது (Azid & Ward-Batts, 2020)[21].

இவ்வாறு பெண்கள் ஈடுபட்ட பொருளாதாரச் செயற்பாடுகளை ஆராயும் போது அக்காலப்பகுதியில் தொழிலாளர் பால் பிரிப்பு (Gender division of labour) நிலவி வந்தமைக்கான சான்றாக அமையப்பெற்றுள்தாக ஷெட்ஸ்மிலர் (1997)[56] வாதிடுகிறார். மத்திய காலப்பகுதியில் முஸ்லிம் பெண்கள் ஒரு தரப்பினராக இருந்து பல்வேறு உடன்படிக்கைகளை மேற்கொண்டதாக குறிப்பிடும் ஷெட்ஸ்மிலர் (1997)[56] பெண்கள் தொழிலதிபர்களாகவும் செயற்பட்டதோடு துறைசார் நிபுணர்களை வாடகைக்கு அமர்த்தியமைக்கான சான்றுகளும் உண்டு என விபரிக்கிறார். சில பெண்கள் தமது பணிகளை நிறைவு செய்வதற்காக தமது கணவர்மாரை வாடகைக்கு அமர்த்தி அவர்களுக்கு ஊதியம் வழங்கினர். அதேபோல் ஊதிய ஒப்பந்தங்களுக்கு நிகரான ஒப்பந்தங்களின் ஊடாக பெண்கள் தரகர்களாகவும் செயற்பட்டனர். அதனூடக அவர்களுக்கான பிரத்தியேகமான தொகை கிடைக்கப்பெற்றதோடு வழக்காற்றை அடிப்படையாகக் கொண்டு மேலதிமான பணிகளில் ஈடுபடும்போது மேலதிகக் கொடுப்பனவும் அவர்களுக்கு வழங்கப்பட்டது (Azid & Ward-Batts, 2020)[21].

அதேபோல் எகிப்தில் மம்லூக்குகளின் ஆட்சிக் காலத்தில் படை வீரர்களின் மனைவியர் அவர்களின் சொத்துக்களை நிர்வகிக்க நியமிக்கப்பட்டிருந்தனர். உஸ்மானிய சாம்ராஜியம் பெண்களுக்காக முகாமைத்துவப் பயிற்சிகளை வழங்கியதோடு பெண்களின் கல்விக்கான பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது. இக்காலப்பகுதியில் பல பெண்கள் வக்ப் நிதியங்களை ஆரம்பித்து ஏழைகள், விதவைகள், அநாதைகள், மாணவர்களுக்கான விடுதிகள், பள்ளிகள், நூல்நிலையங்கள் மற்றும் பல்வேறு விடயங்களுக்கு உதவி வந்தமைக்கான வரலாற்று சான்றுகள் உண்டு (Islahi & Azid, 2020)[21]. மேலும் பிரபல முஸ்லிம் படைத் தளபதிகளுள் ஒருவரான ஸலாஹுத்தீன் அல்அய்யூபியின் மனைவி பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றை நிர்மானித்தல் மற்றும் நலத்திட்டங்கள் போன்றவற்றில் பங்காற்றி வந்தார் (Bardi, 1956)[57].

மேற்கூறப்பட்ட பல்வேறு சான்றுகள் ஊடாக வரலாற்றில் முஸ்லிம் பெண்கள் தமது இயல்புகளுக்கும் தகைமைகளுக்கும் பொருத்தமான பல்வேறு பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை தெளிவாகிறது.

**பாலியல் பணி வேறுபாடு**

பெண்கள் எதிர்நோக்கும் சவால்களை துல்லியமாகப் பகுப்பாய்ந்த இஸ்லாம் பெண்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கில் ஆண் பெண் ஆகியோரின் மனோநிலையை மாற்றி புரிந்துணர்வு மற்றும் மதிப்பினடிப்படையினாலான உறவை ஏற்படுத்தியுள்ளதாக மவ்தூதி (1991)[58] கருதுகிறார். இஸ்லாம் பெண்களை சமூகத்தின் அரைவாசியாகக் கருதி பெண்களின் இயல்பான திறன்களை மேம்படுத்துவதற்கான அனைத்து சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடும் அலி போன்றோர் (2011)[6] இதனூடாக அவர்கள் சமூக முன்னேற்றத்தில் பங்காற்ற முடியும் என விபரிக்கின்றனர். எனவே, ஆண் பெண் ஆகியோரின் பணிப் பிரிப்பை அடிப்படையாகக் கொண்டே அவர்களுக்கிடையிலான தொடர்பை இஸ்லாம் வரையறுத்துள்ளது எனக் கொள்ள முடியும். அந்தவகையில் வீட்டுக்கு வெளியிலுள்ள பணிகளுக்கு ஆணும் வீட்டின் உள்ளகப் பணிகளுக்கு பெண்ணும் பொறுப்பானவர்களாவர் (Ali et al., 2011)[6]. இயல்பாக ஆண்களின் உடல் வலிமை மற்றும் பெண்களின் உடலமைப்பு ஆகியவை இவர்களின் பணி வேறுபாட்டை பிரதிபலிப்பனவையாக அமையப்பெற்றுள்ளதாக ஹமீதுல்லாஹ் (1992)[43] குறிப்பிடுவது இக்கருத்தை மேலும் வலுவூட்டுகிறது.

தற்காலத்தில் பெண்கள் வீட்டு அலுவல்களைக் கவனிப்பது அவர்கள் வெளியில் சென்று தொழிலில் ஈடுபடுவதற்குத் தடையாக அமைகிறது எனும் வாதம் பரவலாக முன்வைக்கப்படுவதை சுட்டிக்காட்டும் அப்துர் ரஹ்மான் (1990)[59] இஸ்லாம் இவ்விரண்டு பணிகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு அவ்விரு நிலைகளுக்கும் சம அந்தஸ்தையே வழங்குவதாகக் குறிப்பிடுகிறார். அந்தவகையில் ஆண், பெண் ஆகிய இருவரில் எவருக்கும் ஒருவரை விட மற்றவருக்கு தனியான மேன்மை எவையும் இல்லை என்பதே அவரது வாதமாகும். அல்குர்ஆன் 4:34[23] இல் பயன்படுத்தப்பட்டுள்ள "*கவ்வாமூன்*" எனும் பதம் பணிப் பிரிப்பை அடிப்படையாகக் கொண்டு பெண்களைப் பராமரிப்பதற்கான ஆண்களின் பொறுப்பைக் குறிக்கிறது எனும் பொருட்கோடலும் (Ali et al., 2011)[6] இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது.

அந்தவகையில் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக செயற்படுவதற்கான அனுமதி பெண்களுக்கு வழங்கப்பட்டிருப்பினும் அவர்களைப் பராமரிப்பது ஆணின் கடமை என வலியுறுத்தும் இஸ்லாம் பெண்களின் இயல்பு மற்றும் இயலுமை ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கான பிரத்தியேகமான கடமைகளையும் பொறுப்புக்களையும் வழங்கியுள்ளது எனக் கொள்ள முடியும்.

**முடிவுரை**

இவ்வாக்கம் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகளை பரிசீலிக்கிறது. பூரண வாழ்க்கைத் திட்டமான இஸ்லாம் சீரிய குடும்ப அமைப்பினூடாக நேர்த்தியான சமூகக் கட்டமைப்பை தோற்றுவிக்க முனைவதோடு ஆண், பெண் ஆகியோரின் இயல்புகளைக்

கவனத்தில் கொண்டு அவர்களின் பணிகளையும் துல்லியமாக வரையறுத்து அவர்களுக்கான பிரத்தியேகக் கடமைகளையும் பொறுப்புக்களையும் குறிப்பிட்டுள்ளது. ஆண், பெண் ஆகிய இருவரும் அனைத்து உரிமைகளையும் பெற்றவர்கள் என்ற வகையில் அவர்களுக்கான உரிமைகளை சட்ட ரீதியான வரையறைகள் ஊடாகவும் ஏனைய போதனைகள் ஊடாகவும் அது உத்தரவாதப்படுத்தியுள்ளது. இவற்றுள் பெண்களின் சமூக நிலையை மேம்படுத்துவதற்காக இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகள் மிக முக்கியமானவையாகும். எனினும் இன்றைய உலகில் முஸ்லிம் சமூகங்களில் இஸ்லாத்தில் பெண்களுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிப்பதில் முஸ்லிம் பெண்கள் பல்வேறு பாகுபாடுகளுக்கும் அநீதிகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். எனவே, இஸ்லாம் பெண்களுக்கு உத்தரவாதப்படுத்தியுள்ள பல்வேறு பொருளாhதார உரிமைகளின் நடைமுறைகள், முஸ்லிம் பெண்களின் பொருளாதார உரிமைகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள், இஸ்லாத்தில் பெண்களின் பொருளாதார உரிமைகள் தொடர்பான பாரம்பரிய மற்றும் நவீன முஸ்லிம் அறிஞர்களின் அணுகுமுறைகளுக்கடையிலான ஒப்பீடு, கால மற்றும் சூழ்நிலைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப அவ்வுரிமைகளின் பொருத்தப்பாடு, பெண்களின் பொருளாதார உரிமைகள் தொடர்பான இஸ்லாமிய மூல ஆவணங்கள் மற்றும் ஏனைய பிராந்திய மற்றும் சர்வதேச சட்டங்கள் மற்றும் பிரகடனங்களுக்கடையிலான ஒப்பீடு போன்ற பல்துறைசார் ஆய்வுகளை மேற்கொள்வது இவ்விடயம் தொடர்பிலான மேலதிக தெளிவைப் பெற உறுதுணையாக அமையும்.

**References:**


1. Akhmetova, E. (2015). Women's Rights: The Qur'anic Ideals and Contemporary Realities. *Islam and Civilisational Renewal, 6*(1), 58-75. DOI: 10.12816/0009897
2. Kola, Kristi. (2018). *Women's Access to Inheritance Property Rights for their Economic Empowerment in Albania* [Master's Dissertation, Queen's University Belfast, Belfast, Northern Ireland]. Global Campus Open Knowledge Repository. https://doi.org/20.500.11825/874
3. Nisthar, S., Mustafa, A. M. M., & Nufile, A. A. M. (2017). An Analysis of Socio- Economic Empowerment of Women in the Light of Islamic Perspectives. *The International Journal for Economics and Business Management, 7*(1), 224- 239. http://ir.lib.seu.ac.lk/bitstream/handle/123456789/3832/%2810%29%20224-239.pdf?sequence=1&isAllowed=y
4. Naja, W. F., Nafrin, M.B. &. Nibras, K. M. (2018). Islam Pengalukku Valangiyulla Porulathara Urimaigal Thodarbana Nadaimuraigalum, Avatrai Petrukkolvathil Pengal Ethirnokkum Savalgalum [Practice of the Economic Rights Granted to Women by Islam and the Challenges Faced by Women in obtaining them: A study based on Hill Village 01 of Sammanthurai Area]. *Proceedings of 5th International Symposium of Faculty of Islamic Studies and Arabic Language on Sustainable Development through Arabic and Islamic Studies*, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3430
5. Abdullah, M. M. A. (2021). Islāttil Penkalin Urimaikaḷ: Oru Kōṭpāṭṭu Rītiyilāṉa Pārvai [Women's Rights in Islam: A Theoretical Perspective]. *Muallim Journal of Social Sciences and Humanities, 5*(1), 84-99. https://doi.org/10.33306/mjssh/114

6. Ali, L. A., Jabeen, F., & Rahat, N. (2011). Islamic Tradition and Feminism: A Comparative Study of Theoretical Perspective. *International Journal of Business and Social Science, 2*(6), 157-167. http://ijbssnet.com/journals/Vol._2_No._6;_April_2011/17.pdf
7. Lone, N. A., Sumaiya, H., & Karima, Y. (2015). Status of Women in Islam: A Perspective. *Global Islamic Economics Magazine, 43*, 61-69. https://ssrn.com/abstract=2739329
8. Hoque, K.A., Jalal Uddin, M. & Saidul Islam, M. (2013). Inheritance Rights of Women in Islamic law: An assessment. *International Journal of Islamic Thoughts, 2*(1), 45-58. https://www.researchgate.net/publication/335395805
9. Galloway, S. D. (2014). *The Impact of Islam as a Religion and Muslim Women on Gender Equality: A Phenomenological Research Study* (Doctoral dissertation, Graduate School of Humanities and Social Sciences of Nova Southeastern University, Florida, United States). NSUWorks. https://nsuworks.nova.edu/shss_dcar_etd/14/
10. Alfitri, O. (2014). Women's Rights and Gender Equality Issues in Islamic Law in Indonesia: The Need to Re-Read Women's Status in the Islamic Religious Texts. *Mazahib, 13*(1), 23-38. https://doi.org/10.21093/mj.v13i1.349
11. Abdullah, R., Radzi, W., Johari, F., & Dastagir, G. (2014). The Islamic Legal Provisions for Women's Share in the Inheritance System: A Reflection on Malaysian Society. *Asian Women, 30*(1), 29-52. https://doi.org/10.14431/aw.2014.03.30.1.29
12. Khan, I., Abdullah, M.F., Rahman, N.N.A., Roslan, M.M.N., & Zulkifli, M.Y. (2016). The Right of women in Property Sharing in Bangladesh: Can the Islamic Inheritance System Eliminate Discrimination?. *SpringerPlus 5*, 1695. https://doi.org/10.1186/s40064-016-3347-2
13. Patoari,M. H. (2019). The Rights of Women in Islam and Some Misconceptions: An Analysis from Bangladesh Perspective. *Beijing Law Review, 10*(5), 1211-1224. DOI:10.4236/blr.2019.105065
14. Nisfa, M. S. F. (2019). Islāthil Peṇṇurimaiyum Thaṟkāla Muslim Samūgathil athaṉ Selvākkum: Kaḷutturai Muslim Piradēsathai Adippadaiyāgak koṇda Ayvu [Women's Rights in Islam and its Influence on Contemporary Muslim Community: A Study Based on the Muslim Area of Kalutara]. *Proceedings of 9th International Symposium 2019 on Promoting Multidisciplinary Academic Research and Innovation*. 27th - 28th November 2019. South Eastern University of Sri Lanka, University Park, Oluvil, Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4107
15. Sultana, R., Aktar, M., & Alam, O. (2015). Women Empowerment in Bangladesh from Islamic Perspective. *IOSR Journal of Humanities and Social Science, 20*(12), 51- 59. http://www.iosrjournals.org/
16. Haque, M. M., Islam, T. M., Tareque, M.I., & Mostofa, M.G. (2011). Women Empowerment or Autonomy: A Comparative View in Bangladesh Context. *Bangladesh e-Journal of Sociology, 8*(2), 17-30. http://www.bangladeshsociology.org/BEJS%208.2%20Women%20Empowerment%20or%20Autonomy.pdf
17. Naz, I., Sami Ullah., Naveed, T. A., Bedi-uz-Zaman., Farooq, S., & Nisar, A. (2010). Women Empowerment and Youth Perception in Pakistan. *European Journal of Scientific Research, 39*(1), 75-89. http://www.eurojournals.com/ejsr.htm
18. Biswas, T. K., & Kabir, M. (2004). Measuring women's empowerment: Indicators and measurement techniques. *Social Change, 34*(3), 64–77. https://doi.org/10.1177/004908570403400305
19. Fatima, S. (2020). Women Empowerment in Islam. *Globus An International Journal of Management & IT, 12*(1), 77-80. doi: 10.46360/Globus.mgt.xxxxxxxx

20. Kabir, K.S. (2007). Towards an Islamic Framework of Women Empowerment. *Journal of the Contemporary Study of Islam*, *2*(2), 113-139. http://tafhim.ikim.gov.my/index.php/tafhim/article/view/47/71
21. Azid, T., & Ward-Batts, J. (2020). Empowerment of Women in Islam: An Introduction. In: Toseef Azid & Jennifer L Ward-Batts (Eds.), *Economic Empowerment of Women in the Islamic World Theory and Practice* (pp. 1-17). World Scientific Publishing Co. Pte. Ltd. https://EconPapers.repec.org/RePEc:wsi:wschap:9789811212154_0001
22. Islahi, A. A., & Azid, T. (2020). Economic Empowerment of Women in Islam. In Toseef Azid & Jennifer L Ward-Batts (Eds.), *Economic Empowerment of Women in the Islamic World Theory and Practice* (pp. 21-38). World Scientific Publishing Co. Pte. Ltd. https://www.worldscientific.com/doi/pdf/10.1142/9789811212154_fmatter
23. *Holy Qur'an*. (Translation of the Meanings of The Noble Quran in the Tamil). (n.d.). Madinah, K.S.A: King Fahd Complex for the Printing of the Holy Qur'an. Available at: http://www.tamililquran.com/suraindex.asp
24. Al-Gazaly, M. (1993). *Huquq al-Insan bayna Ta'lim al-Islam wa 'Ilan al-Umam al-Motahida*. Cairo: Dar al-Kutub al-Islamiyah.
25. Kamali, M. H. (2020). Women in the Workplace: Shari'ah and Contemporary Perspectives. In Toseef Azid & Jennifer L Ward-Batts (Eds.), *Economic Empowerment of Women in The Islamic World Theory and Practice* (pp. 101-126). World Scientific Publishing Co. Pte. https://doi.org/10.1142/9789811212154_0006
26. Al-Shaltuni, I. A. (2019). *Haq al-Mar'at fi al-Mirath* [Woman's Right to Inheritance]. *Mawdoo*. https://mawdoo3.com/
27. EI-gousi, H.S.E.A. (2010). *Women's Rights in Islam and Contemporary Ulama: Limitations and Constraints. (Egypt as Case Study)* (Doctoral thesis, The University of Leeds, Leeds, England). White Rose eTheses Online. http://etheses.whiterose.ac.uk/15221/
28. Haque, M. F., Solihin, S. M., Ahmad, N., & Jani, M. S. (2020). Women Rights to Inheritance in Muslim Family Law: An Analytical Study. *International Journal of Islamic Business & Management*, *4*(1), 15-26. http://dx.doi.org/10.46281/ijibm.v4i1.543
29. Agnes, F. (1996). Economic Rights of Women in Islamic Law. *Economic and Political Weekly*, *31*(41/42), 2832-2838. http://www.jstor.org/stable/4404686
30. Mawoon, M. F. (2012, January 27). Muslim Law in Sri Lanka. *Daily News*. http://archives.dailynews.lk/2012/01/27/fea10.asp
31. Wani, M. (2001). Muslim Women's Right to "Mahr": An Appraisal of the Statutory Laws in Muslim Countries. *Journal of the Indian Law Institute*, *43*(3), 388-409. http://www.jstor.org/stable/43951783
32. Tirkey, S. (2020). *A Critical Analysis of Dower (Mahr) in Theory and Practice in British India through Court Records from 1800 to 1939* (Master's thesis, American University in Cairo, Cairo, Egypt). The American University in Cairo Digital Archive and Research Repository. http://dar.aucegypt.edu/handle/10526/5955
33. Singh, R. K. (2010). Law of dower (Mahr) in India. *Journal of Islamic Law and Culture*, *12*(1), 58-73. https://doi.org/10.1080/1528817X.2010.528594
34. Faiz-ud-din, M. (2012). *A Text Book on Islamic Law* (2nd ed.). Dhaka: Shams Publications. http://hdl.handle.net/123456789/111
35. Mohammad, J. I., & Lehmann, C. (2011). Women's Rights in Islam Regarding Marriage and Divorce. *Journal of Law and Practice*, *4*(3), 1-13. http://open.mitchellhamline.edu/lawandpractice/vol4/iss1/3

36. Wing, A. K. (2006). Constitutionalism, Legal Reform, and the Economic Development of Palestinian Women. *Transnational Law & Contemporary Problems, 15*(655), 656- 715. https://ssrn.com/abstract=1130217
37. Kia, A. (2019). The concept of responsibility of men and women in Islam. *Art Human Open Access Journal, 3*(5), 247-251. DOI: 10.15406/ahoaj.2019.03.00137
38. Muhsin, W. A. (1999). *Qur'an and Woman: Rereading the Sacred Text from a Woman's Perspective*. Oxford University Press.
39. Muslim Women's League. (1995, September). *Women in Society: Economic Rights*. http://www.mwlusa.org/topics/rights/econrights.html#1
40. Al-Tabari, Muhammad ibn Jarir. (2000). *Jāmiʿ al-bayān ʿan taʾwīl āy al-Qurʾān* (Vol. 7.). Beirut: Muasasat al-Risala.
41. El-Shobaky, M. Y. M. (2006). Amal al-mar'at fi daw' alshryet al'iislamia [Woman's Work According to Islamic Regulations]. Paper submitted to the conference of Faculty of Sharia and Law on *Islamic Legislation and the Requirements of Reality*, 13th & 14th March 2016. Islamic University of Gaza, Gaza, Palestine. http://site.iugaza.edu.ps/mshobaky/
42. Kounsar, A. (2017). Economic Rights of Women in Islam: Some Reflections. *International Journal of Interdisciplinary and Multidisciplinary Studies, 4*(2), 37-43. http://www.ijims.com
43. Hamidullah, M. (1992). *Introduction to Islam*. New Delhi: Kitab Bhavan.
44. Anggadwita, G., Mulyaningsih, H. D., Ramadani, V., & Arwiyah, Y. (2015). Women Entrepreneurship in Islamic Perspective: Driver for Social Change. *International Journal of Business and Globalisation 15*(3), 1-13. DOI:10.1504/IJBG.2015.071914
45. Al-Hindi, Ali ibn Abd-al-Malik. (1949). *Kanz al-Ummal Fee Sunan al-Aqwal wa al-Af'al* [Treasures of the Doers of Good Deeds] (Vol. 8). Beirut: Muasasat Al-Risala.
46. Al-Asqalani, Ibn Hajar. (1994). *Al-Isabah fi Tamyiz al-Sahabah*. Beirut: Dar al-Kutub al-Ilmiyyat.
47. Afifi, M. S. (1980). *Al-Mujthma al-Islami wa Usool al-Hukm* [Islamic society and the assets of governance]. Cairo: Dar al-I'tisam.
48. Rajab, M. (2007). *Al-Taarikh...Imra'a* [History ... Woman]. Egypt: Nahdet Misr http://www.kotobarabia.com/
49. Sh'hada, N. Y. (2003). Gender and politics in Palestine: discourse analysis of the Palestinian authority & Islamists. *ISS Working Paper Series / General Series, 30*, 1-88. http://hdl.handle.net/1765/19052
50. Muhammad, H. (2013). Al-Ulama': Tafdil al-Dhukur alaa al-Inath min Afa'l al-Jahiliya [Scholars: Preferring Males over Females is an Act of Ignorance]. *Alittihad*. https://www.alittihad.ae/article/115467/2013/
51. Khairat A. (1978). *Markaz al-Mar'at fi al-Islam* [The status of women in Islam]. Cairo: Dar al-Ma'arif.
52. Huber, D., Stephens, J. D., Bradley, D., Moller, S., & Nielsen, F. (2009). The Politics of Women's Economic Independence. *Social Politics, 16*(1), 1–39. https://doi.org/10.1093/sp/jxp005
53. Al-Abed, M. R., & Hamendi, N. (2018). Revisiting Labeling Theory: An IslamicFeminist Approach to Aboulela's "The Translator". *English Language and Literature Studies; 8*(1), 28-33. https://doi.org/10.5539/ells.v8n1p28
54. Al-Faruqi, L. L. (1983). Islamic traditions and the feminist movement: confrontation or cooperation?. *Islamic Quarterly, 27*(3), 132-139. https://www.semanticscholar.org/
55. Shaikh, S. (2003). Transforming Feminisms: Islam, Women, and Gender Justice. In: Omid Safi (Ed.), *Progressive Muslims, on Justice, Gender, Pluralism* (pp. 145- 162). Oneworld Publications. https://www.researchgate.net/publication/313561149

56. Shatzmiller, M. (1997). Women and Wage Labour in the Medieval Islamic West: Legal Issues in an Economic Context. *Journal of the Economic and Social History of the Orient, 40* (2), 174-206. https://doi.org/10.1163/1568520972600748
57. Bardi, Jamal al-Din. Abu al-Mahasin. (1956). *Al-Nujum al-Zahirat fi Muluk Misr wa al-Qahira* [The rising stars in the kings of Egypt and Cairo]. Cairo: Dar al-Kutub al-Misriyyah.
58. Maududi, S. A. A. (1991). *Purdah and the Status of Woman in Islam*. Chicago: Kazi Publications.
59. Abdur Rahman. (1990). *Women in Shariah (Islamic law)*. London: Ta-Ha Publishers.